தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை

2011-2012

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2011 - 2012

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஆண்டறிக்கை 2011-2012

பொருளடக்கம்

வரிசை எண்.	பொருள்	பக்கம்
(1)	(2)	(3)
1	செயல்களும் கடமைகளும்	1-5
2	நேரடித் தெரிவுகள்	5
3	தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை	6
4	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன	6-8
5	தெரிவுத் தேர்வுகள் அல்லாத இதர தேர்வுகள்	8
6	அரசும் தேர்வாணையமும்	9-10
	பின் இணைப்புகள்	
1	தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்	11
2	நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட புள்ளி விவரம்	12-17
3	வருவாய் மற்றும் செலவு	18
4	வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்	19
5	எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்	20-23
6	பொருத்தமும் தகுதியும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம்	24
7	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள்	25-28
8	ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம்	29-30
9	தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம்	31-33
10	தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம்	34
11	1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம்	35-40
12	அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம்	40
13	வரைபடங்கள்	41-42

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஆண்டறிக்கை 2011-2012

முன்னுரை :-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினால்வர் என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பதிநான்கு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

திரு. அரங்க. செல்லமுத்து, இ.ஆ.ப (ஓய்வு) (18.01.2012) அன்று பணியிலிருந்து விலகினார்	தலைவர்
திரு.ஆர். நடராஜ், இ.கா.ப (ஓய்வு) (23.01.2012 அன்று பணியேற்றார்)	தலைவர்
திரு. மு.இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
திரு. த.சங்கரலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்	உறுப்பினர்
டாக்டர். கி.லெட்சுமணன், எம்.காம்., ஏ.சி.எஸ்(இன்டர்)., எம்.பிஃல்., பிஎச்.டி	உறுப்பினர்
திருமதி. மா.சோபினி, எம்.ஏ	உறுப்பினர்
திரு. முகமது அலி ஜின்னா, பி.இ (16.05.2011 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
டாக்டர். சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பிஃல்., பிஎச்.டி	உறுப்பினர்
டாக்டர். கே.மு.இரவி, எம்.ஏ.,எம்.எல்., ஏ.சி.எஸ்(இறுதி)., பிஎச்.டி (சட்டம்)	உறுப்பினர்
திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
திரு.கே.கே.இராஜா, எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
டாக்டர். சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச்	உறுப்பினர்
திரு. வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி., பி.எட்., எம்.பி.ஏ	உறுப்பினர்
டாக்டர். பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி., எம்.எட்., பிஎச்.டி	உறுப்பினர்
திரு. த.குப்புசாமி பி.எஸ்.சி., பி.ஜி.எல்	உறுப்பினர்
திரு. க.செல்வமணி பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ	உறுப்பினர்

திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப (24.06.2012 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.)	செயலாளர்
திரு.த.உதயசந்திரன்,இ.ஆ.ப(25.06.2012 அன்று பணியேற்றார்)	செயலாளர்
திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப	தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்

மார்ச் 31, 2012 இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி-1

செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடி தெரிவுகள்

1. முதல் நிலைத் தேர்வு (தொகுதி I பணிகள்)

தேர்வுகளின் எண்ணிக்கை	:	1
காலியிடங்களின் எண்ணிக்கை	:	131
தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள்	:	1,49,687

2.முதன்மை எழுத்துத் தேர்வு :-

தேர்வுகளின் எண்ணிக்கை	:	11
காலியிடங்களின் எண்ணிக்கை	:	7,104
தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள்	:	4,46,392

3.நேர்முக தேர்வு :-

தேர்வுகளின் எண்ணிக்கை	:	35
காலியிடங்களின் எண்ணிக்கை	:	921
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	1,892

4. இறுதியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை	:	26
காலியிடங்களின் எண்ணிக்கை	:	8,972
இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	:	8,958

II. இதர தேர்வு விவரங்கள்

1. துறைத் தேர்வு - 2011

விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	:	1,86,557
தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை	:	1,40,018
வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை	:	71.021

2. அரையாண்டுத் தேர்வு

2011 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை :101

2012 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 42

3. கல்வி தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 39

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 753 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் : 75 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துக்களைத் தெரிவித்த வழக்குகள் : 390 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 632 நேர்வுகள்

8. வரவு மற்றும் செலவு

		(ரூபாய் ஆயிரங்களில்)
வரவு	.....	3,19,10
செலவு	.....	31,33,90

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 12 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை கோரி 6 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 172, விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 17,243 ஆகும். இதன் விவரங்கள் பின் இணைப்பு-4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. சீர்திருத்தங்களும் புதிய மாற்றங்களும்.

1. இணையதளத்தில் விடைகளை வெளியிடல் :-

கொள்குறி வகை தேர்வு வினாக்களுக்கு தேர்வு முடிந்த உடன் விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. தேர்வு முடிந்த ஏழு நாட்களுக்குள் விண்ணப்பதாரர்கள் தங்கள் கோரிக்கைகளையும் மறுப்புகளையும் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கலாம். சரிபார்க்கப்பட்ட விடைகள் பிறகு வெளியிடப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் தங்கள் விடைகளை தாங்களே மதிப்பீடு செய்து கொள்ளலாம். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் ஒளி நகல் எடுக்கப்பட்ட விடைத்தாட்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் தங்கள் விடைத்தாட்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.விவரிப்பு வகை தேர்வுகளுக்கான தேர்வுகளில் தேர்வு முடிவு வெளியிடப்பட்டவுடன் விண்ணப்பதாரர்கள் தங்கள் விடைத்தாட்களை தேர்வாணையத்தில் பார்வையிட தேர்வாணையம் அனுமதிக்கிறது. இது தேர்வாணையத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகிறது.

2. காட்சிப்பெட்டி மற்றும் கணினி ஒளிப்படப்பெட்டி பயன்பாடு:-

தேர்வுக்கூடங்களில் நடக்கும் தவறுகளை தடுக்க அனைத்து தேர்வு மையங்களும் காட்சிபெட்டி மற்றும் கணினி ஒளிபடபெட்டி மூலம் ஒருங்கிணைக்கப்படுகின்றன.வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த வாய்மொழித்தேர்வுகள் காட்சிப்பெட்டி மூலம் படம் பிடிக்கப்படுகின்றன.

3. ஆண்டு திட்டமிடல்:-

ஏதிர்வரும் ஆண்டில் என்னென்ன தேர்வுகள் எப்பொழுது நடைபெறும் என்று முன்னோடியாக அறிவிக்கப்படுகிறது. இது விண்ணப்பதாரர்கள் திட்டமிட்டு படிப்பதற்கும் தொடர்புடைய துறையினர் சிறப்பான மனிதவள நிர்வாகத்தினை மேற்கொள்ளவும் பயனுடையதாக உள்ளது.

4. இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்:-

அனைத்து நேரடித்தெரிவுகளுக்கும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறையினை தேர்வாணையம் கொண்டுவந்துள்ளது. விண்ணப்படிவங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளன. கட்டணங்களை அஞ்சல் அலுவலகம் வங்கிகள், கடன் அட்டைகள் மூலம் செலுத்தலாம். கிராமபுற விண்ணப்பதாரர்களின் வசதிக்காக சிறப்பு கட்டண மையங்கள் அமைக்கப்படுகின்றன.

5. ஒரே முறை பதிவு:-

இம்முறையில் ரூ 50/- விண்ணப்பக்கட்டணம் செலுத்தி விண்ணப்பதாரர்கள் தங்கள் விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம். எத்தனை தேர்வுகளுக்கு விண்ணப்பித்தாலும் ஐந்து ஆண்டுகள் வரை விண்ணப்பக்கட்டணம் செலுத்த தேவையில்லை. தேர்வுக்கட்டணம் மட்டும் செலுத்தினால் போதும்.

6. பதவி/அலகு/துறை ஒதுக்கீடு குறித்து அலோசனை அளித்தல்:-

தெரிவு முடிவு அறிவிக்கப்பட்டவுடன் பணிக்கான காலியிட விவரங்கள் பதவி/அலகு/ துறைவாரியாக இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தெரிவு பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களையும் தேர்வாணைய அலுவலகத்திற்கு அழைத்து அவர்களுடைய விருப்பத்திற்கும்,மதிப்பெண்ணிற்கும் ஏற்புடைய பதவி/அலகு/துறையை தெரிவு செய்ய தேர்வாணையம் அலோசனை வழங்குகிறது.

7. துறை பதவி உயர்வு குழுவில் ஒற்றை சாளர முறை:-

பணியமர்த்தும் அதிகாரம் அரசிடம் உள்ள பதவிகளுக்கு பதவி உயர்வு அளிக்கும் திட்டமானது தொடர்புடைய தலைமைச்செயலக துறையில் இணைச்செயலாளர் நிலையில் உள்ளவர் மூலமும்,பணியமர்த்தும் அதிகாரம் துறைத்தலைவரிடம் உள்ள பதவிகளுக்கு பதவி உயர்வு அளிக்கும் திட்டமானது இணை இயக்குநர் நிலையில் உள்ளவர் மூலமும் தேர்வாணையத்தில் நேரடியாக அளிக்கப்பட வேண்டும். அவை, அதே நாளில் தேர்வாணைய அலுவலர்களால் நுணுக்கமாக சரிபார்க்கப்படும். குறைகள் ஏதுமில்லாத திட்டங்கள் ஒரு வார காலத்திற்குள் துறை பதவி உயர்வு குழுவில் வைக்கப்படும். குறைபாடுடைய திட்டங்களில் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி அதே நாளில் குறிப்பு வைக்கப்படும்.

பகுதி-2
நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 26 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 8,972 காலியிடங்களுக்கு இறுதியாக 8,958 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 26 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் நிலைத் தேர்வு

அறிக்கைக்குரிய ஆண்டில் தொகுதி-I பணிக்கு முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட்டது. 131 காலியிடங்களுக்கு 1,49,687 விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பித்தனர்.

முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 7104 காலியிடங்களை நிரப்புவதற்கு 11 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 4,46,392 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

வாய்மொழி தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 921 காலியிடங்களை நிரப்ப 35 பதவிகளுக்கு வாய்மொழி தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 23 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமாக 7 குழுமங்கள் முற்பகலும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 263 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 1,892 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வுகளின் விவரங்கள் பின் இணைப்பு-5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி-3

தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பதவிகள் :

அறிக்கைக்குறிய ஆண்டில் 13 காலியிடங்களுக்கு தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படவில்லை. அவை பின்வறுமாறு:- ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு-I ல் 4, ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வில்-5, சுகாதாரஅலுவலர்-1, அறிவியல் உதவியாளர்நிலை-IIல்2, குழந்தை வளர்ச்சிதிட்ட அலுவலர்-1. இதன் வகுப்பு வாரியான விவரங்கள் பின் இணைப்பு-6 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி -4

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:

1. **பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :**
   அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநில பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 18 பணிகளில் 753 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.
2. **ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:**

அ I.	செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள்	:	1054
II.	(i) தேர்வாணையம் தீர்வு செய்த வழக்குகள்	:	663
	(ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள்	:	100
	(iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது.	:	5
	(iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள்	:	286
III.	வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள்	:	46
ஆ I)	அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள்	:	390
II)	அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள்	:	192
III)	அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள்	:	198

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 390 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு-8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 632 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. ஐந்து நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

வரிசை எண் (1)	பணி வகை (2)	இசைவு அளிக்கப்பட்டவை (3)	இசைவு மறுக்கப்பட்டவை (4)
1.	மாநிலப் பணி	2	1
2.	சார்நிலைப்பணி	7	4
3.	அமைச்சுப்பணி	623	-
	கூடுதல்	632	5

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டவாறு நடப்புக்குரிய ஆண்டில் தற்காலிக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்தது மற்றும் மறுத்துள்ளது.

காலம்	இசைவு அளிக்கப்பட்டது		இசைவு மறுக்கப்பட்டது	
	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்
(1)	(2)	(3)	(4)	(5)
3மா்தங்களுக்குமேல்12 மாதங்களுக்குள்	-	-	-	-
12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள்	-	-	-	-
18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	-	1	-	-
24 மாதங்களுக்கு மேல்	-	12	-	-
கூடுதல்	-	13	-	-

24 மாதங்களுக்கு மேல் 12 நிகழ்வுகளில் தற்காலிக நியமனம் தொடர தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது. விவரங்கள் பின் இணைப்பு 10ல் கொடுக்கப்பட்டுள்ளன.

5. **தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 20(எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:**

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 75 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

6. **விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:**

அரசால் 18 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 17 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 1 நேர்வில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அது தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாததாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு சட்ட பிரிவுக்கூறு 320(3) இன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாததாகவோ அமைந்துள்ளது.

7. **விதிகள் தளர்த்தப்பட்டவை:**

அறிக்கைக்குரிய ஆண்டில் 39 நேர்வுகளில் வயது அல்லது கல்வி தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

பகுதி -5

தெரிவு தேர்வுகள் தவிர இதர தேர்வுகள்

1) **துறைத்தேர்வுகள்:-**

2011-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 331 தாட்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,86,557 நபர்கள் விண்ணப்பித்தனர்.

வ.எண்.	விவரம்	மே - 2011	டிசம்பர்-2011
1.	மொத்த பாடங்கள்	74	73
2.	தேர்வு தாட்களின் எண்ணிக்கை	167	164
3.	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	1,02,622	83,935
4.	தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	77,319	62,699
5.	தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை	39,519	31,502
6	தேர்ச்சி சதவீதம்	51	50

2) **அரையாண்டு தேர்வுகள்:-**

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழி தேர்வு செப்டம்பர் 2011 மற்றும் மார்ச் 2012-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 101 மற்றும் 42 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடுன் இந்திய பாதுகாப்புக்கல்லூரி பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஜீன் 2011 மற்றும் டிசம்பர் 2011-ல் நடத்தியது. அதில் 63 மற்றும் 60 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

பகுதி-6

அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-
அறிக்கைக்குரிய ஆண்டில், அரசு, தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து ஒரு வழக்கில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு -I

(அரசாணை (நிலை) எண்.124, பள்ளிக் கல்வி(எம்2) துறை, நாள் 30.04.2010)

திரு.என். வேணுகோபால், திருவள்ளூர் மாவட்டம், சோழாவரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், பள்ளி உதவி ஆசிரியர் (தமிழ்) ஆக பணிபுரிந்த போது, ஏப்ரல் 1998-ல் நடைப்பெற்ற இடைநிலை பள்ளிச் சான்றிதழ் அரசுத் தேர்வு வினாத்தாட்கள், தேர்வு நடக்கும் முன்னரே வெளியானதற்கு பொறுப்பானவர் என காவல் துறையின் குற்றப் புலனாய்வு பிரிவின் மூலம் அறியப்பட்டதால் அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17(ஆ)-வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு துறை விசாரணையின் முடிவில் நிருபணமான குற்றச்சாட்டிற்கு அன்னாரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.500/- வீதம் மூன்று வருட காலத்திற்கு பிடித்தம் என்ற உத்தேச தண்டனையினை குற்ற அலுவலர் ஏற்றுக் கொள்ளாததால் அரசு இந்த வழக்கில் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கில், விசாரணை அலுவலர் தமது அறிக்கையில் சாட்சி திரு.ராஜா என்பவர், துறை விசாரணையில் பிறழ்சாட்சியாக மாறுவதற்கு முன் காவல்துறை விசாரணையில் கூறியதை அடிப்படையாகக் கொண்டு குற்ற அலுவலர் மீதான குற்றசாட்டு நிருபணமாகிறது என கூறியிருப்பது ஒழுங்கு நடவடிக்கை விதிகளுக்கும் இயற்கை நியதிக்கும் முரணான செயலாகும் என்றும் ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி விசாரணை அறிக்கை, விசாரணையின் போது கிடைக்கப்பெற்ற சாட்சியத்தின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, அதற்கு முன்னால் கிடைக்கப்பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் இருக்கக் கூடாது என்றும், விசாரணை அலுவலரின் அறிக்கை அடிப்படையிலேயே தகுதியற்றது என்றும், துறை விசாரணைக்கு முன்னதாக காவல்துறை விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தினை தடயமாகக் கருதுவது என்பது சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் நிருபணம் என்று தீர்மானிக்கக் கூட தகுதியற்றதாகும் என்றும் எனவே, குற்ற அலுவலரை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து அன்னார் மீதான மேல் நடவடிக்கையினை கைவிடலாம் என்று தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு ஏற்கனவே உத்தேசித்துள்ளவாறு மாதம் ரூ.500/- வீதம் மூன்று வருட காலங்களுக்கு ஓய்வூதிய பிடித்தம் என்ற தண்டனையை உறுதி செய்து தனது அரசாணை (நிலை) எண்.124, பள்ளிக் கல்வி (எம்2) துறை, நாள் 30.04.2010 வாயிலாக ஆணை பிறப்பித்தது.

ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை:- ஏதுமில்லை

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாக தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு-12ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்புரை:-

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கு தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்களுக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய பணியாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக, ஆண்டு முழுவதும் உண்மையாக மற்றும் திறமையாக பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு. ஆர், நடராஜ், இ.கா.ப (ஓய்வு)	தலைவர்
திரு. மு. இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
திரு. த. சங்கரலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்	உறுப்பினர்
டாக்டர்.கி.லெட்சுமணன், எம்.காம் ஏ.சி.எஸ்(இன்டர்) எம்.பில்., பிஎச்.டி	உறுப்பினர்
திருமதி.மா.சோபினி, எம்.ஏ	உறுப்பினர்
டாக்டர். சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பில்., பிஎச்.டி	உறுப்பினர்
டாக்டர்.கே.மு.இரவி, எம்.ஏ., எம்.எல்., ஏ.சி.எஸ்(இறுதி), பிஎச்.டி (சட்டம்)	உறுப்பினர்
திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
திரு.கே.கே.இராஜா, எம்.ஏ., பி.எல்	உறுப்பினர்
டாக்டர் சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச்	உறுப்பினர்
திரு. வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி., பிஎட்.,எம்.பி.ஏ	உறுப்பினர்
டாக்டர். பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி., எம்.எட்., பிஎச்.டி	உறுப்பினர்
திரு. த.குப்புசாமி, பி.எஸ்.சி., பி.ஜி.எல்	உறுப்பினர்
திரு. க.செல்வமணி, பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ	உறுப்பினர்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-600 003.

நாள்: 28.01.2013

திரு.மா.விஜயகுமார், இ.ஆ.ப
செயலாளர்

பின் இணைப்பு - 1

31.03.2012- இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

1	இணைச் செயலாளர்	1
2	துணைச் செயலாளர்	3
3	சார் செயலாளர்	20
4	கணக்கு அலுவலர்	1
5	உதவி கணக்குஅலுவலர்	1
6	ஆராய்ச்சி அலுவலர்	1
7	நூலகர்	1
8	முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர்	1
9	பிரிவு அலுவலர்	72
10	நேர்முக செயலாளர்	1
11	உதவி பிரிவு அலுவலர் மற்றும் கணக்கர்	194
12	உள்ளீடு-விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி)	1
13	உள்ளீடு-விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி)	1
14	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி)	8
15	நேர்முக உதவியாளர்	7
16	நேர்முக எழுத்தர்	12
17	உதவியாளர்	99
18	தொலைபேசி இயக்குபவர்	2
19	தட்டச்சர்	39
20	ஊர்தி ஓட்டுநர்	12
21	பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர்	23
22	மின் தூக்கி இயக்குபவர்	1
23	முதன்மை ஏவலர்	1
24	அலுவலக உதவியாளர்	92
25	காவலர்	6
26	பெருக்குபவர்	4
27	துப்புரவுப்பணியாளர்	3
28	குடிநீர் வைப்பவர்	1

பின் இணைப்பு-2

நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம்

2011-2012ஆம் ஆண்டு

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்கள்	முதன்மைத் தேர்வில அனுமதிக்கப்பட்டவர்கள்
				ப.வ	ப.வ(மு)	ப.கு	மி.பி.வ	பி.வ	பி.வ(மு)	பொது	கூடுதல்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
1	தொகுதி-1 பணிகள் (ஆண்டு 2008-2010)(பல்வேறு பதவிகள்)	20.12.2009	29.06.2011 பெண்கள்	9 2	3 1	1 -	12 4	15 5	(10)	18 5	61 19	98682	70899
2	ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தேர்வு-I-2009 (பல்வேறு பணிகள்)	15.11.2009	07.10.2011 பெண்கள்	212 65	42 11	19 -	276 84	360 112	(10)	429 123	1388 417	438389	419863
3	உதவிபல்மருத்துவர், தமிழ்நாடு மருத்துவப்பணி	17.02.2010	07.07.2011 பெண்கள்	3 1	1 -	- -	5 2	6 2	(10)	7 2	23 7	2623	1850
4	உதவிப்புவியியலர், தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்க சார்நிலைப்பணி	17.02.2010	20.07.2011	-	1	-	1	1	(10)	1	4	1269	648
5	உதவிப்புவியியலர், பொதுப் பணித் துறையில் நிலத்தடிநீர் பிரிவு, தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப்பணி	17.02.2010	20.07.2011	3	-	1	-	-	(10)	-	4	1269	648
6	உதவிப்புவியலர், தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணி	17.02.2010	20.07.2011	-	-	-	-	-	(10)	1	1	1269	648
7	இளநிலை வேதியியலர், தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணிகள்	17.02.2010	27.07.2011 பெண்கள்	- -	1 1	- -	1 -	- -	(10)	1 -	3 1	1269	648

பின் இணைப்பு-2

நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் 2011-2012ஆம் ஆண்டு

வாய் மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	பி.வ(மு)	பொது	கூடுதல்	ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	பி.வ(மு)	பொது	கூடுதல்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
-	-	-	-	-	-	-	129	10 5	3 2	1 -	18 10	26 13	3 2	- -	61 32	Degree	11BC, 6MBC,1SC Candidates Selected against General Turn.
494	91	38	770	1235	112	37	2777	228 72	42 15	17 1	379 115	644 240	52 29	22 12	1384 484	Degree	284 BC, 3BCM, 103MBC, 17SC Candidates Selected Against General Turn 2ST, 1SC(Ortho)1BCM(Deaf)V acancies not filled due to Paucity of suitable Candidates.
-	-	-	-	-	-	-	51	4 3	1 1	- -	5 4	12 10	1 1	- -	23 19	BDS	1SC, 6BC, Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	45	-	1 -	- -	1 -	1 -	- -	- -	3 -	Msc-3	1BC, Candidates Selected against General Turn 1BC Vacancy kept vacant due to Court Order
-	-	-	-	-	-	-	45	3	-	1	-	-	-	-	4	Msc-1 M.Tech-3	-
-	-	-	-	-	-	-	45	-	-	-	-	1	-	-	1	M.Sc M.Phil-1	1BC, Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	45	1 1	- -	- -	1 1	1 -	- -	- -	3 2	M.Sc-3	1SC(W) Candidate Selected against SC(A)Women Vacancy. 1BC, Candidates Selected against General Turn.

8	உதவி பரிசோதகர், தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணி	17.02.210	27.07.2011	-	-	-	-	-	-	1	1	1269	648
9	அறிவுரையாளர், செராமிக் தொழில்நுட்ப நிலையம், விருத்தாசலம், தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணிகள்	17.02.2010	27.07.2011 பெண்கள்	- -	1 1	- -	- -	- -	- -	1 -	2 1	1269	648
10	பள்ளி உதவியாளர் (ஆங்கிலம், கணிதம், அறிவியல், மனையியல்) தமிழ் பண்டிதர் நிலை-I, தமிழ் பண்டிதர் தமிழ்நாடு சமூக பாதுகாப்பு சார்நிலைப்பணி	01.08.2010	27.07.2011 பெண்கள்	- -	3 3	- -	2 -	1 -	1 -	1 1	8 4	1713	773
11	ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு (பல்வேறு பதவிகள்)	14.07.2010	05.09.2011 பெண்கள்	99 28	21 7	5 1	133 39	175 49	23 7	205 60	661 191	32462	30754
12	கால்நடை உதவி மருத்துவர், கடமாடும் கால்நடை மற்றும் பால்வளர்ச்சிதுறை	18.06.2010	26.04.2011 பெண்கள்	1 -	1 1	- -	2 1	1 -	- -	2 1	7 3	413	391
13	பேச்சு மற்றும் கேட்பு சிறப்பியலர், தமிழ்நாடு மருத்துவப்பணி	27.12.2009	17.02.2012 பெண்கள்	- -	1 1	- -	- -	- -	- -	1 -	2 1	506	413
14	நுண்ணுயிரியியலர், தமிழ்நாடு மருத்துவப்பணி	27.12.2009	17.02.2012	-	1	-	1	-	-	1	3	506	413
15	உதவி இயக்குநர், சமூக நலத்துறை, தமிழ்நாடு பொதுப்பணிகள்	18.06.2010	01.03.2012	-	1	-	-	-	-	1	2	2439	2110
16	குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், சத்துணவு திட்டம், தமிழ்நாடு பொதுப்பணி	18.06.2010	01.03.2012	5	1	-	6	8	1	9	30	2439	2110
17	விடுதி கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணி	22.09.2010	01.03.2012 பெண்கள்	2 1	- -	- -	2 1	3 1	- -	3 1	10 4	173	660

-	-	-	-	-	-	-	45	-	-	-	-	1	-	-	1	BE-1	1BC, Candidates Selected against General Turn.
-	-	-	-	-	-	-	45	1 1	- -	- -	- -	1 -	- -	- -	2 1	DCT-1 M.Tech-1	1BC, Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	45	- -	3 3	- -	2 -	1 -	1 -	1 1	8 4	Degree	-
-	-	-	-	-	-	-	1333	107 34	23 7	5 1	177 55	311 106	25 7	8 4	656 214	BE-486, ME-70	137 BC, 2BCM, 46MBC, 10SC, 2SC(A) Candidates Selected against General Turn
3	3	-	6	3	-	6	21	1 -	1 1	- -	3 2	1 -	- -	1 -	7 3	BVSC	1MBC. Candidates Selected against General Turn.
-	3	-	-	-	-	3	6	1 1	- -	- -	- -	- -	- -	1 -	2 1	PG	1SC Women Candidates Selected against. Sc(A) Women Vacancy
-	3	-	3	-	-	3	9	2 1	- -	- -	1 -	- -	- -	- -	3 1	PG	1SC Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	6	- -	1 1	- -	- -	1 1	- -	- -	2 2	Degree	1BC Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	66	6	1	-	7	13	2	-	29	Msc-29	5BC, 1BCM, 1MBC, 1SC Candidates Selected Against General Turn 1GT Blind Vacancy not filled due to Paucity of suitable Candidate
7	-	-	12	11	-	-	30	2 1	- -	- -	4 1	4 2	- -	- -	10 4	Degree	1BC, 2MBC Candidates Selected against General Turn.

18	அறிவியல் உதவியாளர் நிலை-II, தமிழ்நாடு தடய அறிவியல் சார்நிலைப்பணி	17.02.2010	01.03.2012 பெண்கள்	2 1	1 1	1 -	3 1	4 1	1 -	4 1	16 5	2851	2463
19	காப்பாட்சியர் (புவியியல் பிரிவு,) காப்பாட்சியர் (மாவட்ட அருங்காட்சியகம்,) உதவி காப்பாட்சியர், பொருட்காட்சி வழிகாட்டுநர்- அருங்காட்சியக துறை	05.03.2010	17.02.2012 பெண்கள்	- -	3 3	- -	3 -	2 -	- -	4 1	12 4	702	605
20	கிராம நிர்வாக அலுவலர், தமிழ் நாடு அமைச்சுப்பணி,பொது மற்றும் குறைவு காலியிடங்கள்	21.07.2010	15.03.2012	364 815	90 156	26 109	484 -	626 -	84 -	732 -	2407 1080	1046531	961275
21	தொகுதி-IV பணிகள் (மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும்), (பல்வேறு பதவிகள்)	19.02.2011	28.02.2012	-	-	-	-	-	-	-	321	13512	11190
22	சுகாதார அலுவலர், தமிழ்நாடு பொதுசுகாதாரப்பணி	16.04.2011	30.03.2012 பெண்கள்	1 1	1 -	- -	2 -	4 1	- -	4 1	12 3	149	50
23	மறுவாழ்வு ஆசிரியர், தமிழ்நாடு மருத்துவப்பணி	16.04.2011	30.03.2012	-	-	-	-	-	-	1	1		22
24	உதவி பதிப்பாளர், தமிழ்நாடு அருங்காட்சியங்கள்	16.04.2011	30.03.2012	-	-	-	-	-	-	1	1	391	87
25	மக்கள்திரள் பேட்டியாளர், தமிழ்நாடு பொதுசுகாதார சார்நிலைப்பணி	16.04.2011	30.03.2012	-	-	-	-	-	-	1	1		154
26	தொகுதி-IV பணிகள் (சிறப்புப் போட்டித் தேர்வு)	06.12.2007	2012	-	-	-	-	-	-	-	2911	-	-
	கூடுதல்										**8972**		

6	3	1	11	21	3	1	46	2	1	-	3	7	1	-	14	Degree	3BC, 1MBC Candidates Selected against General Turn 1SC, 1GT(W) Vacancy not filled due to Paucity of Candidate
5	3	-	12	11	1	2	34	2 2	1 1	- -	4 -	5 1	- -	- -	12 4	BA History-2 MA Public-1 MA History-4, B.Sc Geography-1, Bsc Zoology-2, Msc Botony-1, MA Socialogy-1	3BC, 1MBC Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	-	428 815	96 156	27 109	703 -	1049 -	89 -	15 -	2407 1080	SSLC	423BC,5BCM, 219 MBC 67SC, 3SC(A), 1ST Candidates Selected against General Turn
-	-	-	-	-	-	-	-	60 17	12 4	1 -	92 22	143 46	8 4	5 2	321 95	SSLC	Special Recruitment for Back lock Vacancies for Disable Persons
8	2	-	-	-	-	-	33	3 3	1 -	- -	2 1	4 3	- -	1 -	11 7	MBBS	1GT Ortho Vacancy not filled due to Paucity of Suitable Candidate
-	-	-	-	-	-	-	3	-	-	-	-	-	-	1	1	MSC Audiology	-
1	-	-	-	2	-	-	3	-	-	-	-	1	-	-	1	MA Economics	1BC Candidates Selected against General Turn
-	-	-	1	3	-	-	4	-	-	-	-	1	-	-	1	MA Economics	1BC Candidates Selected against General Turn.
-	-	-	-	-	-	-	-	892	-	-	185	1262	-	572	2911	SSLC	Last Phase Selection Completed in 2012
															8958		

பின் இணைப்பு -3

(தொடர்புப்பகுதி - 1)

2011-2012 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு விவரங்களின் அட்டவணை

இனங்கள்	(ரூபாய் ஆயிரங்களில்)
அ) வருவாய்	
விண்ணப்பப் படிவம் விற்பனை	2,432
துறைத் தேர்வுகள் கட்டணம்	1,22,76
நேரடி தேர்வுகள் கட்டணம்	1,42,39
இதர வருவாய்	29,63
கூடுதல்	**3,19,10**
ஆ) செலவு	
அடிப்படைச் சம்பளம்	10,42,90
மருத்துவப் படி, வீட்டுவாடகை, நகர ஈட்டுறுதி படி	1,31,18
அகவிலைப்படி	5,15,13
மருத்துவச் செலவுகள்	943
ஏனையப் படிகள்	11,50
பயணச் சலுகைகள்	4,55
அஞ்சல் செலவுகள்	2,00
பயணச் செலவுகள்	9,11
தொலைபேசி கட்டணங்கள்	6,16
ஏனைய சில்லரைச் செலவுகள்	18,66
தொழில்சார் சிறப்புப்பணிகளுக்குத் தொகை கோருதல்	8,99,35
பரிசுகள் மற்றும் விருதுகள்	4
வாடகை/வரிகள்/தண்ணீர் மற்றும் பராமரிப்பு	1,80,63
விளம்பரச் செலவுகள்	1,39,53
இயந்திரம் பராமரிப்பு மற்றும் வாங்குதல்	18,13
இயக்க ஊர்தி எரிபொருள் செலவு, வாங்குதல், பராமரிப்பு	22,79
கூலி	58,93
மின்சாரக்கட்டணம்	14,50
கணிப்பொறி	39,58
கால முறை பராமரிப்பு மற்றும் சிறு வேலைகள்	9,80
கூடுதல்	**31,33,90**

பின் இணைப்பு-4

(தொடர்பு பகுதி-I)

2011-2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	பதவிகளின் எண்ணிக்கை	காலியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்கள்
1	உதவி பதிப்பாளர், புவியியல் பிரிவு, தமிழ்நாடு அருங்காட்சியகங்கள், தமிழ்நாடு அமைச்சுப்பணி	16.04.2011	1	1	391
2	பால்வள உதவியாளர், பால்வள வளர்ச்சி சார்நிலைப்பணி	16.04.2011	1	6	
3	மக்கள் திரள் பேட்டியாளர், தமிழ்நாடு பொதுசுகாதார சார்நிலைப்பணி	16.04.2011	1	1	
4	தொகுதி – I ஆ பணி - உதவி ஆணையாளர், தமிழ்நாடு இந்து சமய அறநிலை நிர்வாகப்பணி	16.04.2011	1	9	2728
5	சுகாதார அலுவலர், தமிழ்நாடு பொதுசுகாதாரப்பணி	16.04.2011	1	12	149
6	மறுவாழ்வு ஆசிரியர், தமிழ்நாடு மருத்துவப்பணி	16.04.2011	1	1	
7	தொழிலாளர் அலுவலர், தமிழ்நாடு தொழிலாளர் பணி	23.04.2011	1	15	4790
8	பொதுமுன்னாள் / தொழில் நுட்ப உதவியாளர், தமிழ்நாடு உந்தூர்திகள் பராமரிப்பு சார்நிலைப்பணி	16.05.2011	2	13	1041
9	மருந்துகள் ஆய்வாளர், தமிழ்நாடு மருத்துவப்பணி	21.03.2012	1	90	8144
10	இளநிலை பகுப்பாய்வாளர், மருந்துகள் பரிசோதனை ஆய்வகம், தமிழ்நாடு மருத்துவப்பணி	21.03.2012	1	23	
11	பிணைல் உதவியாளர், தமிழ்நாடு சிறை சார்நிலைப்பணி	21.03.2012	1	1	
	கூடுதல்		12	172	17243

பின்இணைப்பு-5

(தொடர்புப் பகுதி-II)

2011-2012 ஆம் ஆண்டு நடந்த முதல் நிலைத்தேர்வு, முதன்மை எழுத்துத்தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகள்

வ. எண்	பதவியின் பெயர் மற்றும் பணிகள்	காலியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்கள்	தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை	எழுத்துத்தேர்வு நடைபெற்ற நாட்கள்
1	I-முதல் நிலைத் தேர்வு தொகுதி-I பணிகள்	131	1,49,687	98,197	05.06.2011
	கூடுதல்	**131**	**1,49,687**	**98,197**	
1	II-முதன்மைத் தேர்வுகள் உதவி அரசு வழக்குரைஞர் நிலை-II, தமிழ்நாடு பொதுப்பணி	83	5,410	2,623	23.07.2011 and 24.07.2011
2	ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு -I	6,695	4,18,391	3,77,016	30.07.2011
3	தொகுதி-I ஆ பணி-உதவி ஆணையாளர், இந்து சமய அறநிலைய நிர்வாகப்பணி	9	2,728	1,117	06.08.2011
4	தொகுதி-IV பணிகள் (மாற்றுத்திறனாளிகள் மட்டும்)	268	13,492	9,658	07 08.2011
5	சுகாதார அலுவலர், தமிழ்நாடு பொதுசுகாதாரப்பணி	12	149	72	14.08.2011
6	மறுவாழ்வு ஆசிரியர், தமிழ்நாடு மருத்துவப்பணி	1			14.08 2011
7	பால்வள உதவியாளர், தமிழ்நாடு பால்வள வளர்ச்சி சார்நிலைப்பணி	6			03.09.2011
8	மக்கள் திரள் பேட்டியாளர், தமிழ்நாடு பொதுசுகாதார சார்நிலைப்பணி	1	391	192	11.09.2011
9	உதவி பதிப்பாளர், கஜட் பிரிவு, தமிழ்நாடு அருங்காட்சியகங்கள்	1			11.09.2011
10	தொழிலாளர் அலுவலர், தமிழ்நாடு தொழிலாளர் பணி	15	4,790	2,708	25.09.2011
11	பொது முன்னாள்/தொழில் நுட்ப உதவியாளர், தமிழ்நாடு உந்தூர்திகள் பராமரிப்பு சார்நிலைப்பணி	13	1,041	538	16.10.2011
	கூடுதல்	**7,104**	**4,46,392**	**3,93,924**	

III-வாய்மொழித் தேர்வு

வ. எண்	நாள்	பதவி மற்றும் பணியின் பெயர்		குழுமங்கள்							கூடுதல்
				I	II	III	IV	V	VI	VII	
1	26 04 2011	கால்நடை உதவி மருத்துவர், பால்வளத்துறையில் நடமாடும் கால்நடைப்பிரிவு	FN	4	4	4	4	5	-	-	21
